தமிழிசைக் கலைக் களஞ்சியம்

தொகுதி

1

முனைவர் வீ.ப.கா. சுந்தரம்



பாரதிதாசன் பல்கலைக்கழகம்

பல்கலைப் பேரூர், திருச்சிராப்பள்ளி- 620 024

தமிழிசைக் கலைக்களஞ்சியம்

முதல் தொகுதி

(அ – ஔ)

பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி

நூலாக்கக் குறிப்புகள்

நூலின் பெயர்	:	தமிழிசைக் கலைக்களஞ்சியம் - முதல் தொகுதி (அ - ஔ - வரிசை)
ஆசிரியர்	:	முனைவர் வீ.ப.கா. சுந்தரம்
பதிப்பு உரிமை	:	பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி - 620 024.
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதல் பதிப்பு - 1992 இரண்டாம் பதிப்பு - 2006 (திருவள்ளுவர் ஆண்டு - 2037)
தாள்	:	மேப்லித்தோ
புத்தக அளவு	:	டெம்மி 1 X 4
பக்கங்கள்	:	36 + 384 = 420
படிகள்	:	1000
விலை	:	ரூ. 250/-
பொருள்	:	தமிழிசைக் களஞ்சியம்
அட்டைப்படம் & அச்சகம்	:	யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ், 101-D, இராயப்பேட்டை நெடுஞ்சாலை சென்னை - 600 004 ✆ : 2466 1807

பொருளடக்கம்

	பக்கம்
அணிந்துரை	i
கலைக்களஞ்சிய ஆசிரியரின் முகவுரை	ii
இசைக் கலைக் களஞ்சியத்தின் உள்ளடக்கம்	iv
தாளக் குறியீடுகள்	v
சுரங்களின் குறியீட்டு விளக்கம்	vii
சொற் பொருள் விளக்கம்	viii
தமிழிசைக் கலைக்களஞ்சியத்தின் பயன்பாடு	x
துணை நின்ற நூல்கள்	xv
சுருக்கக் குறியீட்டு விளக்கம்	xxv
தமிழிசைக் கலைக்களஞ்சியம் (அ-ஔ)	1-372

1) **கானல்வரி** (சிலப்.7) என்னும் காதைப் பகுதியில் கோவலனும் மாதவியும் கடற்கானல்நிலத்துப் பாடிய வரிப்பாடல்கள் உள்ளன. கானல்வரிப் பாடல்கள் யாழிலிட்டுப் பாடியவை. இந்த வரிப் பாட்டு வழியாகக் கானல்வரி என்று இக்காதை பெயர் பெற்றது. எ-டு: 'கடலாடிய கோவலனும் மாதவியும் கழிக்கானலிடத்து யாழிலிட்டுப் பாட்டு நிகழ்த்திய கானல்வரி; இஃது இசைப்பாவால் பெற்ற பெயர்' (சிலப்.பதிகம்.69.அடியார்க்.).

2) மங்கல வாழ்த்துப் பாடல் (சிலப்.1) என்பது சில்ப்பதிகாரத்தின் முதற் காதை. இது பல்வேறு வகைத் தாள நடைகளையுடைய இசைப்பாடல்களால் மங்கலத்தை வாழ்த்துவதால் 'வாழ்த்துப் பாடல்' எனப் பெயர் பெற்றது; மேலும் சிந்தியல் வெண்பா, குறள் வெண்பா, அகவல் முதலிய இசைப்பாடல் வகைகளாலும் வாழ்த்துவதால் வாழ்த்துப்பாடல் எனப் பெயர் பெற்றது எனலாம்.

3) வேட்டுவவரி (சிலப். 12) என்னும் பகுதியில் அணங்கு மெய்ந்நிறீஇத் தெய்வமுற்று ஏத்தல், உரைப்பாட்டு மடை, வள்ளிக் கூத்து, வென்றிக் கூத்து, முன்னிலைப் பரவல், வெட்சிக் குரலிசைத்துக் காட்டல், சுடரொடு, அணியொடு, துடியொடு, (சிலப்.12:(18) (19), (20)-) என்னும் மூன்றும் மூன்றடுக்கி முடுகியலாய் வந்த தாழிசைக் கொச்சக ஒருபோகு (தொல். செய்.149.நச்.), கொற்றவையைப் பரவும் பலிக் கொடைப் பாட்டாகிய தாழிசைகள் உள்ளன. வேட்டுவரின் வரிப்பாடலால் 'வேட்டுவ வரி' எனப் பெயர் பெற்றது.

4) ஊர் சூழ் வரி (சிலப்.19) என்பதில் கணவனை இழந்து கண்ணகி கதறிப் புலம்பும் வரிப்பாடல்களும் பிறவும் உள்ளன. ஊரின் பெண்டிர்காள்! இது மற்றைச்சிலம்பு-காணுங்கள் என்று காட்டினாள் கண்ணகி.

5) குன்றக் குரவை (சிலப்.24) என்பது குரவைக் கூத்திற்குரிய பாடல்களால் பெயர்பெற்றது.

6) ஆய்ச்சியர் குரவை (சிலப்.17) என்பது ஆய்ச்சியர் குரவைக்கூத்திற்குரிய பாடல்களால் பெயர்பெற்றது.

7) வாழ்த்துக் காதை (சிலப்.29) என்பதில் தேவந்தி, காவற்பெண்டு, அடித்தோழி முதலியோரின் இசைப் பாடல்களும், ஆயத்தார் வாழ்த்திப் பாடிய வெண்பாக்கள், குறள் பாடல்கள், அம்மானை வரி, கந்துக வரி, ஊசல்வரி வள்ளைப் பாட்டு முதலிய இசைப் பாடல்கள் உள்ளன. எனவே சிலப்பதிகாரம் 'இசையிடையிட்ட இனிய செய்யுட் காப்பியம்' என்று இக்கலைக் களஞ்சியம் கூறுவது பொருந்துவதாகும்.

இசைப்புகல் நான்கு

இசைப்புகல் நான்கு = புல்லாங்குழலில் குறித்த சில துளைகளில் காற்றானது புகுந்து உண்டாக்கும் பண் வகைகள் நான்கு: 1) பெரும் பண், 2) பண்ணியல், 3) திறப்பண், 4) திறத்திறப்பண்.

(1) ஏழு துளைகளில் காற்றானது புகுந்து உண்டாக்கும் பண் 'ஏழ்புகல்' (பெரும்பண்).

(2) பிறதுளை மூடியிருக்க, ஆறு துளைகளில் காற்றானது புகுந்து உண்டாக்கும் பண்-அறுபுகல் (பண்ணியல்).

(3) இனி, ஐந்து துளைகளில் காற்றானது, புகுந்து உண்டாக்கும் பண் ஐம்புகல் (திறப்பண்).

(4) பிறதுளை ஒலிக்காதிருக்க, நான்கு துளைகளில் காற்றானது புகுந்து உண்டாக்கும் பண் நாற்புகல் (திறத்திறப் பண்).

சில துளை திறந்திருப்பினும் ஒலிக்கா. ஏழு துளைகளுள் ஒன்றை மூடிக்கொண்டு வாசிக்க ஆறு துளைப் பண் கிடைக்கும்; இரண்டை மூடிக்கொண்டு வாசிக்க ஐந்து துளைப் பண்கிடைக்கும்; மூன்று துளைகளை மூடிக்கொண்டு வாசிக்க நாலு துளைப் பண் கிடைக்கும். ஒலியுண்டாக்கும் துளையை மட்டும் கொள்க.

ஆய இசைப் புகல் நான்கில் அமைந்த புகல்
வகை எடுத்து
மேயதுளை பற்றுவன விடுப்பனவாம் விரல்
நிரையில் (பெரிய பு.ஆனாய.26)

பண் வகைகளைப் பகுக்குங்கால், புல்லாங்குழல் வழியாகப் 'புகல் வகை நான்கு' என்று பகுத்திருந்தனர்.

1) பெரும்பண் - ஏழ்புகற்பண் - ஏழ் நரம்புப் பண் (சம்பூர்ண இராகம்).
எ-டு: ஏழ் பெரும்பாலைகள்.
2) பண்ணியல் - அறுபுகற்பண் - ஆறு நரம்புப் பண் (சாடவ இராகம்).
எ-டு: ஆசான் எனும் பண்ணியல்.
3) திறப்பண் - ஐம்புகற்பண் - ஐந்து நரம்புப் பண் (ஔடவ இராகம்).
எ-டு: முல்லைத்தீம்பாணி.
4) திறத்திறப்பண் - நாற்புகற்பண் - நாலு நரம்புப் பண் (சதுர்த்த இராகம்).

டாக்டர் சி. தங்கமுத்து
துணைவேந்தர்

பாரதிதாசன் பல்கலைக்கழகம்
பல்கலைப்பேரூர்
திருச்சிராப்பள்ளி - 620 024
தமிழ்நாடு

அணிந்துரை

கலைகளுள் இசைக்கலை பழமையானது. உயிர்களை இசையவைக்கும் தன்மை கொண்டதால் இசை எனப்பட்டது. சங்க காலத்தில் தமிழிசை சிறப்புற்று விளங்கியது. பல்வேறு இசை நூல்கள் அழிந்துபோனதை உரை நூல்கள் உணர்த்துகின்றன. சிலப்பதிகாரம் இசைத் தமிழ்க் களஞ்சியமாக விளங்குகிறது.

திருமுறைகளும் பாசுரங்களும் தமிழிசை வளத்தைக் காட்டுகின்றன. குடுமியான் மலை இசைக் கல்வெட்டுப் பழந்தமிழிசையைப் பறைசாற்றுகிறது. சோழர் காலத்தில் மிகச்சிறப்புடன் திகழ்ந்த தமிழிசை 13-ஆம் நூற்றாண்டுக்குப்பின் அயலவர் ஆட்சியால் வாழ்விழந்தது.

சீர்காழி முத்துத்தாண்டவர், மாரிமுத்தாப்பிள்ளை, அருணாசலக் கவிராயர் ஆகிய மும்மூர்த்திகளால் இடையிடையே தமிழிசை கொஞ்சம் எழுந்து நின்றது. பள்ளும் குறவஞ்சியும் தமிழ்ப் பண்ணிசைத்தாலும் பின் தீட்டுக் கழிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டது.

20-ஆம் நூற்றாண்டில் ஆபிரகாம் பண்டிதரும் விபுலானந்த அடிகளும் தமிழிசை ஆய்வுச்சுடரை ஏற்றி வைத்தனர். அவர்தம் கருணாமிருத சாகரமும் யாழ்நூலும் ஒப்பற்ற தமிழிசை ஆய்வுக் களஞ்சியங்களாகத் திகழ்கின்றன.

தனித்தமிழ் இயக்கம்போல் தமிழிசை மீட்சிக்கும் தமிழிசை இயக்கம் அண்ணாமலை அரசரால் தோற்றுவிக்கப்பட்டது. பாவேந்தர் பாரதிதாசன், முடியரசன் முதலான கவிஞர்கள் தமிழிசைப் பாடல்கள் இயற்றி எழுச்சியூட்டினர்.

குடந்தை ப. சுந்தரேசனார், முனைவர் எஸ். இராமநாதன், முனைவர் வீ.ப.கா. சுந்தரம் முதலியோரால் தமிழிசை ஆய்வு புத்தொளி வீசியது.

பழஞ்சிறப்பு வாய்ந்த தமிழிசை பற்றிய கலைக்களஞ்சியம் ஒன்று தொகுக்கப்பெற வேண்டும் என்ற எண்ணம் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் கருக்கொண்டது. அப்பணியைச் செம்மையுறச் செய்து முடிக்க தம் வாழ்நாளில் பெரும் பகுதியைத் தமிழிசை ஆய்வில் ஈடுபடுத்திய முனைவர் வீ.ப.கா. சுந்தரம் அவர்கள் பணிக்கப் பெற்றார்.

அவர், பூக்காட்டுத் தேனீக்கள் பூபாளம் இசைக்கின்ற தேனி மாவட்டத்தில் பச்சை அலைகள் பாயும் வயல்களும் பனிமேகமும் தவழ்ந்து செல்ல பாட்டருவி ஓடிவரும் மலைகளும் சூழ்ந்த 'கோம்பை' எனும் சிற்றூரில் பிறந்தார். தந்தையின் இசைப்புலமைத் தாலாட்டில் வளர்ந்து, பசுமலை சோழசுந்தர பாரதியாரின் தொல்காப்பியப் பட்டறையில் வடித்தெடுக்கப்பெற்று, சங்கர சிவனாரின் தாளப்பயிற்சியில் இசைநுட்ப இழையோடித் தழைத்தார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் வித்துவான் பட்டமும் முதுகலைஞர் பட்டமும் மதுரைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டமும் பெற்றார். அமெரிக்கன் கல்லூரி, பசுமலை ஆசிரியப் பயிற்சிப்பள்ளி, தமிழ்நாடு இறையியல் கல்லூரி ஆகியவற்றில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றினார். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் தமிழிசை ஆய்வுப்பணியை மேற்கொண்டார்.

"பழந்தமிழ் இலக்கியத்தில் இசையியல்" எனும் நூல் அவர்தம் ஆய்வு நுட்பத்தைக் காட்டுகிறது. தியாகராசருக்கு தேவாரப் பாடல்களே வழிகாட்டின என்ற உண்மையைத் 'திருஞான சம்பந்தரே கீர்த்தனையின் தந்தை' எனும் சிறு நூலின் மூலம் வெளிப்படுத்தினார். 'தமிழிசையியல்' எனும் நூல் இசைக் கல்லூரியில் பாட நூலாகத் தகும் தன்மை பெற்றது. பஞ்ச மரபுக்கு எழுதிய உரை புலமைத்திறனை புலப்படுத்துகிறது.

எல்லாவற்றுக்கும் மேலாகப் பன்னிரண்டு ஆண்டுகள் அயராது உழைத்து உருவாக்கிய இந்தத் தமிழிசைக் கலைக்களஞ்சியமே நுண்மாண் நுழைபுலம் செறிந்த படைப்பாக ஒளி வீசுகிறது. முனைவர் ச. முத்துக்குமரன் அவர்கள் துணைவேந்தராக இருந்தபோது தமிழிசைக் கலைக்களஞ்சியத்தின் முதல் தொகுதி 1992-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் வெளிவந்தது.

இரண்டாம் தொகுதி 1994-ஆம் ஆண்டும் மூன்றாம் தொகுதி 1997-ஆம் ஆண்டும் முனைவர் வீர. முத்துக்கருப்பன் அவர்கள் துணைவேந்தராக இருந்தபோது வெளிவந்தன.

பேரா. பெ. ஜெகதீசன் அவர்கள் துணைவேந்தராக இருந்த காலத்தில் நான்காம் தொகுதி 2000-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

தமிழிசைக் கலைக்களஞ்சியத்தின் நான்கு தொகுதிகளும் இப்போது புதுப்பொலிவுடன் இரண்டாம் பதிப்பாக வெளிக்கொணர்வதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

சி. தங்கமுத்து

அணிந்துரை

பாரதிதாசன் பல்கலைக்கழக வெளியீடாகிய 'தமிழிசைக் கலைக் களஞ்சியம்' என்பது தமிழக இசைக் கலையோடு நாடகம், நாட்டியம், சிற்றூர் ஆடல் பாடல் முதலிய கலைகளையும் விளக்குகின்றது. தமிழகத்தில் முதன்முதல் வெளிவரும் தமிழிசைக் கலைக் களஞ்சியம் ஆதலால் இது அறிஞர்களால் புதுப்பிக்கப்படுவதற்கும் விரிவாக்கப்படுவதற்கும் உரியது.

வளரும் தமிழ் மொழிக்கு வளமையூட்டவும், தமிழ் இசையுலகினிற்கு இனிது பயன்படவும் தக்கதோர் இசைக் கலைக்களஞ்சியத்தை உருவாக்க பாரதிதாசன் பல்கலைக்கழகம் முடிவெடுத்தது. அந்தக் கலைக்களஞ்சியத்தில் பண்டைய இலக்கிய இலக்கண நூற்களில் காணப்படும் இசைக் குறிப்புக்கள் யாவற்றிற்கும் விளக்கங்கள் தந்து மறந்து போன இசை மரபுகளை மலரச் செய்தல் வேண்டும் என்றும், பண்டைய தமிழ் அறிஞர்களும் பக்தர்களும் அருளிய இசை உருவங்கள், பண்கள், தாளங்கள் முதலியவைகளையும் விளக்க வேண்டும் என்றும், இன்று நாட்டில் வழங்கிவரும் இசை, நாட்டியம், நாடகம், சிற்றூர் ஆடல் பாடல் ஆகிய கலைகளை இனிய எளிய தமிழில் எடுத்துக்காட்ட வேண்டும் என்றும் முடிவெடுக்கப் பட்டது.

தமிழில் தோன்றிய பண்டைக்கால இசை நூற்கள் நமக்கு இன்று கிடைக்கவில்லை, ஆயினும் இன்று நமக்குக் கிடைத்துள்ள பண்டைய இலக்கியங்களில், எண்ணற்ற இசைக் குறிப்புக்கள் காணக் கிடைக்கின்றன. அவை நரம்பியல் (சுரஇயல்), பண்ணியல் போன்ற தலைப்புக்களில் திரட்டித் தொகுக்கப்பெற்று இக்கலைக் களஞ்சியத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

வாழ்நாளில் செம்பாதி ஆண்டுகள் இசை ஆய்வில் தோய்ந்து, இயற்றமிழ்ப் புலமை அடிப்படையில் தம் இசை ஆய்வைத் தொடர்ந்து நிகழ்த்திக் கொண்டிருக்கும் இசை வல்லுநர் முனைவர் வீ.ப.கா. சுந்தரம் அவர்களிடம் இச்சீரிய பணியை ஒப்படைப்பது என்று பாரதி தாசன் பல்கலைக்கழக ஆட்சிக்குழு முடிவெடுத்து அவரிடம் இப்பணியை ஒப்படைத்தது.

முனைவர் வீ.ப.கா. சுந்தரம் உருவாக்கியுள்ள இக்கலைக்களஞ்சியம் தமிழிசையிய லுக்குப் பல்வகையில் முன்னேற்றமும் புது ஆக்கமும் ஊட்டும் என்று நம்புகிறேன். அண் மைக் காலத்தில் வெளிவந்துள்ள இசையியல் நூற்கள் பலவும் சென்ற முந்நூறு ஆண்டு இசைத் தொண்டுகளையும் இசை வரலாறுகளையும் விரிவாக விளக்கிக் காட்டியும், பண்டைய இசை வரலாறுகளை ஓரளவிற்கு மிகச் சுருக்கமாகவே சுட்டிக் காட்டியும் சென்றுள்ளன. அந்நூற் களில் சிறப்பாகக் காணப்பெறாத சிலப்பதிகார இசையியல் நுணுக்கங்களை இக்கலைக் களஞ்சியம் முழுமையாக விளக்க முயன்றுள்ளது. மேலும் தொல்காப்பியர் காலந்தொட்டு இசையியல் படிப்படியாய் வளர்ந்து வளம் பெற்று வந்துள்ளதை இந்நூல் எடுத்துக் காட்டியுள்ளது.

இக்கலைக் களஞ்சியம் உருவாக்குவதற்குத் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் முனைவர் சி. பாலசுப்பிரமணியம், பாரதிதாசன் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் மா. இராமலிங்கம், தமிழ்ப் பல்கலைக்கழகப் பேராசிரியர் முனைவர் முத்து சண்முகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் முனைவர் சுப. அண்ணாமலை, முனைவர் டி. சந்திரன், திருச்சி மருத்துவர் இரா. கலைக்கோவன் ஆகியோரின் ஆலோசனை அவ்வப்பொழுது பெற்றுக் கொள்ளப்பட்டன. அவர்கட்கு பாரதி தாசன் பல்கலைக்கழகத்தின் நன்றி உரித்தாகுக.

ச. முத்துக்குமரன்.

கலைக்களஞ்சிய ஆசிரியரின் முகவுரை

சங்க இலக்கியங்களிலும் சிலப்பதிகாரத்திலும் தேவார திவ்ய பிரபந்த நூல்களிலும் காணக்கிடைக்கும் இசையியல் கருத்துக்களை வளமையாக வெளியிடல் வேண்டும் என்னும் ஆவலில், பாரதிதாசன் பல்கலைக்கழகத் துணைவேந்தர் மாண்புமிகு முனைவர் ச.முத்துக்குமரன் அவர்களை வேண்டினேன். ஏழிசையாய் இசைப்பயனாய் இலங்கும் இறைவனின் திருவருள் கூட்டியது. துணைவேந்தர் 'தமிழிசைக் கலைக் களஞ்சியம்' ஒன்றை உருவாக்குமாறு பணித்தருளினார். இசைக் கலைக் களஞ்சியத்தைப் படிப்படியாய் அமைத்துவந்த பல்வேறு நிலைகளிலும் துணைவேந்தர் பல்லாற்றானும் நல்லாற்றுப்படுத்தி உதவிகளை நல்கினார்.

சென்ற முந்நூறு ஆண்டுகளில் தென்னகத்தில் வாழ்ந்து வந்த அறிஞர்கள் சமசுகிருதத்திலும், தெலுங்கிலும் நூல்களை எழுதி வைத்திருந்தாலும் 'அவையாவும் தமிழக அறிஞர்கள் தொன்று தொட்டுப் பலநூற்றாண்டுகளாகப் படிப்படியாய் முயன்று வளர்த்துக்கொண்டு வந்த கருத்துக்களின் விளைவே' என்பது பெருந்தகை ச.முத்துக்குமரன் ஆங்காங்குக் கூறிவரும் செய்தியாகும். எனவே சென்ற முந்நூறு ஆண்டுகளாக சமசுகிருதத்திலும், தெலுங்கிலும் வெளிவந்துள்ள இசைச் செய்திகளும், இசைச் சொற்றொடர்களும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. அவற்றைத் தோற்றுவித்தற்கு மூலமாக நின்றுதவிய தமிழ்நூற் செய்திகளும், சொற்றொடர்களும் ஆங்காங்கு இணைத்துக் காட்டப் பட்டுள்ளன.

இப்பனுவலில் கிட்டத்தட்டத் தொள்ளாயிரம் தலைச்சொல்கள் விளக்கப்பட்டுள்ளன. பண்ணின் சுரவகைகள் எளிமையாகக் குறித்துக் காட்டப்பட்டுள்ளன. இசையிலக்கணக் குழப்பங்கள் இவை இவை எனக் காட்டுவதற்கும், இசைக் கண்டுபிடிப்புக்களின் தெளிவை நிறுவுவதற்கும் கட்டகங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. தென்னக இசைக்கலை, தொன்மை தொட்டுத் தொடர்ந்து படிப்படியாய் வளர்ந்து வந்துள்ளது.

தொல்காப்பியத்தில் இசையியல் என்னும் எழில்நங்கை பிறந்து, பாட்டிலும் தொகையிலும் தவழ்ந்து விளையாடி, சிலப்பதிகாரத்தில் கட்டழகுக் கன்னியாகி, தேவார, திவ்ய பிரபந்தப் பக்தியிலக்கியங்களில் தாயாகி விளங்குவதைக் களஞ்சியம் விளக்கியுள்ளது. தொல்காப்பியத்தில் காணக் கிடக்கும் இசையிலக்கணக் கூறுபாடுகள் ஏற்ற எடுத்துக்காட்டுகளுடன் விளக்கப்பட்டுள்ளன.

தியாகராச சுவாமிகள் முதலிய திருவாரூர் இசை மூவர்களும், இவர்கட்கு முன்னர் வாழ்ந்த முத்துத் தாண்டவர் முதலிய சீர்காழி இசை மூவர்களும், இவர்கள் யாவர்க்கும் இசை நெறிகளை அமைத்துக் காட்டிக் கோயில் கொண்டுள்ள நாயன்மார்களும் ஆழ்வார்களும் கூர்தல் முறையில் சிறப்பிடம் பெறுகிறார்கள். இவை யாவற்றிற்கும் மேலாகச் சிலப்பதிகாரமும் அதன் இரு பெரும் உரைகளும் சிறப்பிடம் பெறுகின்றன. சிலப்பதிகாரத்தில் அவிநய ஒற்றைக்கை முப்பத்து மூன்றுக்கும் ஓவியம் வரைந்து காட்டப்பட்டுள்ளன. செய்யுளில் காணப்படும் விரல்களைப் பற்றிப் படித்துக் கொண்டு மடித்துவைத்துப் பயன்படுத்துக.

இசை நூல்களை எழுதிய அறிஞர்கள் இந்த அகராதியில் இடம் பெறுகின்றார்கள். செயல் துறைக் கலைஞர்கள்(Performing Artists) ஆகிய பாடல்களைப் பாடுபவர்களையும், இசைக் கருவிகளை இசைப்பவர்களையும் பற்றிய குறிப்புக்கள் நூலின் ஈற்றில் இடம் பெறுகின்றன.